நல்வரவு

வான் கோ கல்லூரியில் CLA1, CLA2 என்று இரண்டு நுழைவு வகுப்புக்கள் உள்ளன.
ஒரு வகுப்பில் போர்த்துகீசர், தாய்லாந்தினர், பாகிஸ்தான், மாலியன்ஸ், ivorians, அல்ஜீரியன், ரஷ்யர்கள் என பல நாட்டு மாணவர்கள் உள்ளனர்.
அவர்கள் நன்றாக பிரஞ்சு கற்றுக்கொள்வதற்காக cla ஒன்றில் ஒரு வருடம் கற்றுக்கொள்ள வேண்டும் cla இரண்டில் வாரம் ஒன்றிற்கு 10 மணிநேரம் பிரஞ்சு கற்பிக்கப்படுகின்றது. இங்குள்ள மாணவர்கள் அனைவரும் பல்வேறு நிலைகளில் உள்ளனர். இதனால் ஒவ்வொரு மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் ஆசிரியர்கள் நடவடிக்கை எடுக்கின்றனர்.

கல்லூரி பற்றிய சில தகவல்கள்

பாடசாலை - பெற்றோர் உறவு

கல்லூரியில் இரண்டு செயளாளர் உள்ளனர் ஒருவர் தலைமை செயளாளர், மாணவர்களை கல்லூரியில் சேர்க்க வருபவர்கள் இவரது அலுவலகத்திற்குச் செல்லவேண்டும் அவர் ஆண்டு முழுவதும் மாணவர்கள் கல்லூரியில் சேர்வதற்கான பத்திரத்தை வழங்குவார், மற்றைய செயலாளர் ஒரு குடும்பத்தின் வருமான அடிப்படையில் மாணவர்களுக்கு வழங்கப்படும் பண உதவியையும் (bourse)மற்றும் கன்டீன் கட்டணங்களைக் கவனித்துக் கொள்கிறார்.

குறிப்பீட்டுப் புத்தகம்

குறிப்பேடுகள் ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் பெற்றோர்கள் தேவையான குறிப்புக்களை எழுத அனுமதிக்கிறது. ஆசிரியர் ஒரு சந்திப்பைக் கோரலாம் அல்லது ஒரு தகவலை பெற்றோருக்கு தெரிவிக்க முடியும், அதே போல் பெற்றோர் ஆசிரியரை சந்திக்க வேண்டும் என்றாலும் அப் புத்தகத்தில் எழுது கையொப்பமிட்ட அனுமதி கோரலாம். எப்பொழுதும் ஆசிரியரின் குறிப்புக்களுக்கு பெற்றோர் கட்டாயமாக கையொப்பம் இடவேண்டும். புத்தகத்தில் உள்ள குறிப்புக்களுக்கு தாமதமின்றி வெகு விரைவில் காரணங்கள் கூறப்படவேண்டும். தாமதமாகச் சென்றால் அதற்குரிய சீட்டுக்களில் பதியப்பட வேண்டும். மாணவர் கல்லூரிக்குச் செல்ல முடியாவிட்டால் அதற்கான காரணத்தை புத்தகத்தில் எழுதி பெற்றோர் கையொப்பத்துடன் அதற்குப் பொறுப்பாக உள்ளவரிடன் அதைக் காட்ட வேண்டும்.

காப்புறுதி

இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து, அனைத்து மாணவர்களும் விபத்துக் காப்பீட்டுச் சான்றிதழ்களை கல்லூரியில் வழங்க வேண்டும்.

அறிக்கை தாள் (Le bulletin)

ஒரு ஆண்டில் மூன்று காலாண்டுகள் உள்ளன, ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும்(டிசம்பர், மார்ச், மே) ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள், மற்றும் வகுப்புத் தலைவனும் பங்குபெறும் கலந்துரையாடல் நடைபெறும். மேலும் முக்கியமாக ஒவ்வொரு மாணவர்களின் நடத்தை, அவரது வேலை, தரம் பற்றி விவாதிக்கப்படும். ஒவ்வொரு மாணவர்களினதும் சராசரி மற்றும் எல்லாப் பாடங்களுக்கான மதிப்பெண்களும் ஆசிரியர்களின் அறிவுரைகளும் உள்ளன. நன்றாக வேலைசெய்த மாணவர்களுக்கு வெகுமதி, ஊக்குவிப்பு, பாராட்டுக்கள் கிடைக்கும். மோசமான வேலை அல்லது சரியாக செய்யாது இருப்பினும் அந்த மாணவருக்கு ஒரு எச்சரிக்கையும், கண்டனத்தையும் தெரிவிக்க முடியும். மேலும் அந்த அறிக்கைத் தாளில் ஒரு மாணவர் எத்தனை தடவை கல்லூரிக்கு வரவில்லை அல்லது தாமதமாக வந்தார்கள் என்பதும் பதியப்பட்டு இருக்கும்.

கல்லூரி வாழ்க்கை (vie scolaire)
cpe மற்றும் மேற்பார்வையாளர்கள் (cpe: கல்வி மூத்த ஆலோசகர்)
cpe மாணவர்களின் தாமதங்களையும், கல்லூரிக்குச் செல்லாதுவிடல்(absent), மாணவர்களின் தீய நடவடிக்கைகளை கண்காணிக்கின்றார்கள். மேலும் கல்லூரிக்குள் நுழையும் போதும், வெளியே செல்லும் போதும் புத்தகங்களை சரிபார்த்தல், மாணவர்கள் தமது கடமைகளை தொடர்ந்த செய்கிறார்களா என்பதும் மேலாளர்களால் கண்காணிக்கப்டுகிறது. ஒரு ஆசிரியர் இல்லாது இருக்கும் போது மாணவர்களை என்ற அறைக்குள் ஏதாவது பாடப்புத்தகம் கொண்டு சென்று படிக்க வேண்டும் இதனை மேற்பார்வையாளர்கள் கண்காணித்துக் கொண்டு இருப்பார்கள்.

La Permanence
ஒரு ஆசிரியர் வராவிட்டால் மாணவர்கள் சென்று படிக்க வேண்டிய இடம்.

சிற்றுண்டிச்சாலை (La Cantine)
மாணவர்கள் உணவகத்தில் சாப்பிடுவதற்கு பதிவு செய்திருப்பின் கண்டிப்பாக ஒவ்வொரு நாளும் (திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி) சாப்பிடவேண்டும், மதியவேளை கல்லூரிக்கு வெளியே செல்ல முடியாது. மாணவர்கள் தங்களது பைகளையும் மற்றைய பொருட்களையும் லாக்கரில் பூட்டி வைத்துவிட்டுச் செல்லவேண்டும். ஒரு வாரத்திற்கான மெனு கன்டீன் அருகே இருக்கும். வீட்டில் சாப்பிடும் மாணவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

Cop (வழிகாட்டுதல் ஆலோசகரான உளவியளாளர்)
மாணவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதை ஆய்வு செய்வதற்கு உதவுகிறது, ஆனால் அது ஒவ்வொருநாளும் இருக்காது.

கல்லூரியில் மருத்துவமனை
கல்லூரியில் ஒரு மாணவருக்கு உடம்பு சரியில்லை என்றால் அந்த மாணவரை அவர் பார்ப்பார் ஆனால் மருந்து கொடுக்க முடியாது, உண்மையில் மாணவரின் உடல்நிலை சரியில்லாத போது பெற்றோருக்கு தகவல் தெரிவித்து அவரை அழைத்துச் செல்ல அழைப்பு விடுப்பார்.

கல்லூரி நடவடிக்கைகள்
கல்லூரி விடுமுறை நாட்களில் வகுப்புக்கள் தொடங்க ஒரு சில நாட்களுக்கு முன்னர் கல்லூரியின் கதவுகள் திறந்திருக்கும், மாணவர்கள் (பாரீஸ் பார்த்தல், சமையல்.........) திட்டமிட்ட நடவடிக்கைகளை இலவசமாக பதிவு செய்யலாம்.

கல்வி உதவி
ஆண்டு முழுவதும் ஆசிரியர்களினால் நாடகம், சினிமா, தோட்டம் வீட்டுப்பாடங்கள் செய்வதற்கான உதவிகள் போன்றவை திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி தினங்களில் வழங்கப்படும், இதற்கான பதிவுகள் செய்யும் மாணவர்களுக்கு இவை இலவசமாகவே இவை செய்யப்படும்.

ருளேளு
மாணவர்கள் ஒரு விளையாட்டினைத் தேர்வுசெய்து கல்லூரி விளையாட்டுத் துறை ஆசிரியருடன் ஒவ்வொரு புதன்கிழமை பிற்பகலிலும் விளையாடலாம். அதற்கான கட்டணமாக ஆண்டு முழுவதற்கும் 20ஈரோவினைச் செலுத்த வேண்டும்.